செ.வெ.எண்:567 நாள்:07.07.2010

பத்திரிக்கைச் செய்தி

**வங்கிக்கடன் மூலம் புதிய ஆட்டோக்கள் வாங்குவதற்கான பொன்னான வாய்ப்பு**

சென்னை மாநகரில் ஆட்டோ பெர்மிட் வழங்குவதற்கான தடை நீக்கம் செய்யப்பட்டு எவ்வித நிபந்தனையுமின்றி ஆட்டோ பெர்மிட் வழங்க அரசால் 13.5.2010-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆட்டோ பெர்மிட் வழங்கும் முறை எளிதாக்கப்பட்டு, சென்னை பெருநகரில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதுவரை 46908 ஆட்டோ பெர்மிட் செயல்முறை ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் சுய வேலை வாய்ப்பு பெறும் வகையிலும் பெருகி வரும் சென்னை மாநகர மக்களின் போக்குவரத்து தேவையின் அடிப்படையிலும் எளிய முறையில் ஆட்டோ பெர்மிட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆட்டோக்கள் வாங்க அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் தேவையான கடனுதவி பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பயனாக சென்னையில் உள்ள அனைத்து 9 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் (திருவாண்மியூர், மந்தைவெளி, அயனாவரம், கே.கே.நகர், புளியந்தோப்பு, தண்டையார் பேட்டை, அண்ணா நகர், குளத்தூர் மற்றும் சின்மயா நகர்) ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்குவதற்கான கடன் வழங்கும் முகாம்கள் வங்கியினரால் அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் 12.7.2010 அன்று காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடத்தப்படவுள்ளது. ஆட்டோ பெர்மிட் பெறுவதற்குரிய செயல்முறை ஆணையைப் பெற்றவர்கள் அவ்வாணையுடன் அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சென்று வங்கியாளர்களின் ஆலோசனையைப் பெறுவதுடன் வங்கிகளின் முன்னிசைவு ஆணையை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் இம் முகாம் மூலம் வங்கிக் கடனுதவி பெற விரும்புபவர்கள் அசல் ஆளறிச் சான்று, இருப்பிடச் சான்று மற்றும் புகைப்பட நகல் மூன்றுடன் முகாமில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஆளறிச் சான்றுக்கு கடவுச் சீட்டு (Passport), வருமான வரி கணக்கு அட்டை (PAN Card), வாக்காளர் அடையாள அட்டை (Voter ID Card), ஓட்டுநர் உரிமம் ( Driving License) இவற்றில் ஏதேனும் ஒன்றும் இருப்பிடச் சான்றுக்கு தொலைபேசி கட்டண ரசீது (Telephone Bill), மின் கட்டணம் செலுத்திய ரசீது ( E.B. Bill), குடும்ப அட்டை ( Ration Card), சொத்து வரி ரசீது (Property Tax) ) இவற்றில் ஏதேனும் ஒன்றை ஆதாரமாக காண்பிக்க வேண்டும்.

ஆட்டோ வாங்குவதற்கான வங்கிகள் நடத்தும் கடனுதவி முகாமில் ஆட்டோ பெர்மிட் செயல்முறை ஆணை பெற்றவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

போக்குவரத்து ஆணையர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.